### வரலாற்றை எல்லோரும் படிப்பார்கள் – சிலர் வரலாற்றைப் படைப்பார்கள் – ஆனால்

# நம் முதல்வர் - வரலாறாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்!

## பேரவை நிறைவேற்றிய அலுவல்களைப் பட்டியலிட்டு – பேரவைத் தலைவர் மு.அப்பாவு நெகிழ்ச்சியுரை!

**சென்னை, மே 3 -**

**சட்டப்பேரவையில், இப்பேரவைக் கூட்டத் தொடரின் நிறைவான அலுவலாக - ' பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் குறித்து, நீண்ட நெடிய விவரங்களுடன் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் நெகிழ்ச்சிமிகு உரையாற்றினார்கள்.**

**அவ்வுரையில் பேரவைத் தலைவர் அவர்கள், "சிலர் வரலாற்றைப் படிப்பார்கள்! சிலர் வரலாற்றைப் படைப்பார்கள்!. ஆனால் நமது முதல்வர் அவர்களோ, வரலாறாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்" என்று உருக்கமுடன் குறிப்பிட்டார்.**

**பேரவைத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

**பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்**

பதினாறாவது பேரவையின் ஏழாவது கூட்டத்தொடரின் முதல் கூட்டம்

6-1-2025 அன்று தொடங்கி 11-1-2025 வரை நடைபெற்றது. ஏழாவது கூட்டத்தொ டரின் இரண்டாம் கூட்டம் 14-3-2025 முதல் இன்று (29-4-2025) வரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இக்கூட்டத்தொடரில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பின்வருமாறு:

பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட) - 36 நாட்கள்

அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் - 168 மணி 56 நிமிடங்கள் (29-4-2025 பிற்பகல் 1-30 வரை)

**நிறைவேற்றப்பட்ட முக்கிய சட்டமுன்வடிவுகள்**

(1) மாற்றுத் திறனாளிகளின் குரல், உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒலிக்க வேண்டுமென்ற நோக்கிலும், அவர்களின் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டு, தங்களுக்கான வாய்ப்புகளையும், சிறப்புரிமைகளையும் சமமாகப் பெறுவதற்கும், அனைத்து வகை உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவுகள் 16-4-2025 அன்று - முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, இன்று (29-4-2025) நிறை வேற்றப்பட்டது.

(2) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் கும்பகோணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று - முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, (மேசையைத் தட்டும் ஒலி) 28-4-2025 அன்று -

உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு, இன்று (29-4-2025) நிறை வேற்றப்பட்டது.

**முக்கியத் தீர்மானங்கள்**

(1) தமிழ்நாட்டில் சமூகநீதிக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வலுவான உயர் கல்வி கட்டமைப்பை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாலும்,

தமிழ்நாடு இளைஞர்களின் எதிர்காலத்தை கடுமையாகப் பாதிக்கும் என்பதாலும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்ட இரண்டு வரைவு நெறிமுறைகளையும், பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வரைவு நெறிமுறைகளையும் உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று ஒன்றிய அரசின் கல்வித் துறையை வலியுறுத்தும் தீர்மானம் 9-1-2025 அன்று ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது.

(2) சிறுபான்மையின இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில், 1995 ஆம் ஆண்டின் வக்ஃப் சட்டத்தினை திருத்தும் வகையில் ஒன்றிய அரசு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்ஃப் திருத்தச் சட்டமுன்வடிவினை (The Waqf (Amendment) Bill, 2024) முழுமையாக திரும்பப் பெற வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானம் 27-3-2025 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**பாரம்பரிய மீன்பிடி உரிமைகள்!**

(3) தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலை நாட்டிடவும், இலங்கை கடற்படையால் தமிழ் நாட்டு மீனவர்களுக்கு ஏற்படும் அனைத்து இன்னல்களைப் போக்கிடவும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து, கச்சத்தீவைத் திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும்; அரசு முறைப் பயணமாக இலங்கை செல்லும் - இந்தியப் பிரதமர் அவர்கள், இலங்கை அரசுடன் பேசி, அந்நாட்டுச் சிறையில் வாடும்

நமது மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டுக் கொண்டு வர வேண்டுமென்றும் வலியுறுத்தும் தீர்மானம் 2-4-2025 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**இக்கூட்டத் தொடரில் முதல்வர் அவர்களால் அறிவிக்கப் பெற்ற முக்கிய அறிவிப்புகள்!**

(1) தமிழும் ஆங்கிலமும்தான் தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கை. அதில் எந்த மாற்றமும் இல்லை. இது மொழிக் கொள்கை மட்டுமல்ல; நமது வழிக் கொள்கையும் இதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன், விழிக் கொள்கையும் இதுதான்! எந்தப் பழிச்சொல் சொன்னாலும், இந்த உயிர்க் கொள்கையில் விட்டுத் தர மாட்டோம்; விட்டு விலக மாட்டோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இம்மாமன்றத்தில் உறுதியாக மீண்டும் மீண்டும் நான் பதிவு செய்கிறேன் என்று - முதலமைச்சர் அவர்கள் இரு மொழிக் கொள்கை குறித்து 25-3-2025 அன்று அறிவித்தார்கள்.

(2) லண்டனில் சிம்பொனி இசை நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தியிருக்கும் இசைஞானி இளையராஜா அவர்களைப் பாராட்டும் விதமாகவும், அவர் திரையுலகத்திற்கு வந்து 50 ஆண்டுக்காலம் நிறைவடையக்கூடிய நாளான, ஜூன் 2 ஆம் தேதி அவருடைய பிறந்த நாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் பாராட்டு விழா நடத்தப்படும் என்று - முதலமைச்சர் அவர்கள் 27-3-2025 அன்று இப்பேரவையில் அறிவித்தார்கள்.

**பெருந்தலைவர் காமராசர் நூலகம்!**

(3) தமிழ்நாட்டில் கிராமங்கள்தோறும் பள்ளிகளைத் தொடங்கி, மதிய உணவு அளித்து, இலட்சக்கணக்கான குடும்பங்களின் கல்விக் கண்களைத் திறந்து, தமிழ்நாட்டின் கல்விப் புரட்சிக்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் வித்திட்ட பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பெயர், திருச்சியில் அமையவிருக்கும் நூலகத்திற்கு சூட்டப்படும் என - முதலமைச்சர் அவர்கள் 1-4-2025 அன்று அறிவித்தார்கள்.

### சட்டப் பேரவையை ஜனநாயக முறையில் நடத்திட எனக்குப் பேருதவியாக இருந்த முதலமைச்சருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி!

(4) திராவிட இயக்கத்தினுடைய தலைவர்களில் ஒருவராக இருந்த W.P.A. சௌந்தரபாண்டியன் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்கப்படும் என்று - முதலமைச்சர் அவர்கள் 7-4-2025 அன்று இப்பேரவையில் அறிவித்தார்.

(5) 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற அடிப்படையில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் - முதலமைச்சர் அவர்கள், கல்வியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டி ருக்கக் கூடிய, பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய, பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் பல்கலைக்கழகமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் கும்பகோணத்திலே ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) - முதலமைச்சர் அவர்கள் 24-4-2025 அன்று அறிவித்தார்.

(6) தமிழ்நாட்டு மாணவர்களின் திறனை வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற மாணவர்களில் இந்த ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து அகில இந்தியப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 57 மாணவர்களில் 50 பேர் 'நான் முதல்வன்' திட்டத்தில் பயிற்சி பெற்றுப் பயன் அடைந்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

'நான் முதல்வன்' திட்டத்தின் போற்றத்தக்க இந்த வெற்றியினைத் தக்க வைக்கவும், தேர்வில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்த வேண்டும் என்பதற்காகவும், சென்னை, செனாய் நகர் பகுதியில் 500 மாணவர்கள் தங்கி படிக்கக்கூடிய வகையில், அனைத்து நவீன வசதிகளுடன்கூடிய ஒரு பயிற்சி மையம் 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்று - முதலமைச்சர் அவர்கள் 24-4-2025 அன்று அறிவித்தார்கள். குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் 26-4-2025 அன்று - முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாத ஓய்வூதியம், 30 ஆயிரம் ரூபாயிலிருந்து 35 ஆயிரம் ரூபாயாக 1-4-2025 முதல் உயர்த்தி வழங்கப்படும் எனவும், முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம், மாதம் 15,000 ரூபாயிலிருந்து 17,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் எனவும், முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு ஆண்டொன்றிற்கு தற்போது வழங்கப்படும் மருத்துவப்படி75ஆயிரம்ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என - முதலமைச்சர் அவர்கள் 26-4-2025 அன்று அறிவித்துள்ளார்.



சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளின்மீது விதிக்கப்படும் 18 சதவிகித GST வரியினால் தொகுதி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில், இந்த 18 சதவிகித GST வரித் தொகையை தமிழ்நாடு அரசே ஏற்கும் என - முதலமைச்சர் அவர்கள் 26-4-2025 அன்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**சிறப்பு நேர்வுகள்**

சட்டமன்றப் பேரவையில் 13-8-2021 அன்று அளிக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கையில், 1921-ஆம் ஆண்டு முதல் சட்டமன்றப் பேரவை மற்றும் சட்ட மேலவை நிகழ்வுகள் குறித்த பதிவுகள் மற்றும் ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டதற்கிணங்க, முதற்கட்டமாக, 1952-ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான சட்டமன்ற ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்பட்டு, - சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், ஆராய்ச்சி யாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயனடையும் வகையில், 'tnlasdigital.tn.gov.in' எனும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 25-4-2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**பேரவை நடைபெற உதவிய அனைவருக்கும் நன்றியுரை-**

- முதலமைச்சர் அவர்கள் பேரவைக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாகவே அவைக்கு வந்திருந்து, பேரவை நடவடிக்கைகளைச் சீரோடும் சிறப்போடும் அமைய எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தார்கள். கேள்வி நேரம் உட்பட அனைத்து விவாதங்களிலும் கலந்து கொண்டு, உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளை உன்னிப்பாகக் கவனித்து, அவர்கள் தெரிவிக்கும் கோரிக்கைகள் குறித்து உடனுக்குடன் உரிய விளக்கங்களை அளித்துள்ளார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அவர்கள் பேச வாய்ப்புக் கோரும் நேர்வுகளில், பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிட வேண்டும் என்கிற தன்னுடைய எண்ணத்தினை வெளிப்படுத்தி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் போதுமான அளவில் நேரம் வழங்கப்பட்டு, பேரவையை ஜனநாயக முறையில் நடத்திட எனக்கு பேருதவியாக இருந்த - முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### அரசியல் ஜாம்பவான் – எதிர்கால இந்தியாவின் வழிகாட்டி – நமது முதலமைச்சர் வீற்றிருக்கும் இந்த அவையில் பேரவைத் தலைவராக நான் இருப்பதை எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்!

மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களில் - அமைச்சர்களின் பதிலுரையின்போது, பதிலுரையை முழுமையாகக் கவனித்து பேரவை நடவடிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்துள்ளார்கள். அதற்காக - முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரலாற்றை எல்லோரும் படிப்பார்கள். சிலர் வரலாற்றைப் படைப்பார்கள். ஆனால், நம் - முதலமைச்சர் அவர்களோ வரலாறாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையில் குழு**

ஒன்றிய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள், கடமைகள், உரிமைகள் பற்றி ஆய்வு செய்து முடிவு எடுக்க ராஜமன்னார் குழுவை, 1969 ஆம் ஆண்டு அமைத்தார் அப்போதைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள். 50 ஆண்டுகளுக்கு முன்பு தந்தை எப்படி போர் குணத்துடன், ராஜதந்திரியாகச் செயல்பட்டு ராஜமன்னார் Commission அமைத்தாரோ அதே வழியில் இன்று தனயன், நம்முடைய - முதலமைச்சர் அவர்கள், மாண்பமை உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் ஜோசப் குரியன் அவர்கள் தலைமையில் Committee அமைத்து ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளார்கள் நம்முடைய - முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகஸ்ட் 1988 முதல் ஏப்ரல் 1989 வரை எஸ்.ஆர். பொம்மை அவர்கள் கர்நாடக முதலமைச்சராக பொறுப்பு வகித்து வந்தார்கள். 1989 ஏப்ரல் 21 அன்று, Article 356-யைப் பயன்படுத்தி ஒன்றிய அரசு, கர்நாடகாவில், ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வந்தது.

அதை எதிர்த்து, எஸ்.ஆர்.பொம்மை அவர்கள், உச்ச நீதிமன்றம் வரை சென்று போராடி, இந்தியா முழுமைக்கும் Article 356-ஐ பயன்படுத்தக் கூடாது என்ற ஒரு நீதியைப் பெற்றுத்தந்தார். அதே வழியில் இன்றைய முதல்வர் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பெற்று - ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்ட மசோதாக்கள், இரண்டாவது முறையாக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டும், - ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்கு மீண்டும் அனுப்பப்பட்டது. அம்மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், வேண்டுமென்றே மேதகு குடியரசு தலைவர் அவர்களுக்கு மசோதாக்களை அனுப்பி, தமிழக சட்டமன்றத்தினுடைய மாண்பை சீர்குலைக்கும் வகையில் - ஆளுநர் அவர்கள் நடந்து கொண்ட விதத்திற்கு எதிராக, - முதலமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததன் பயனாக, - ஆளுநரோ அல்லது மேதகு குடியரசுத் தலைவரோ மூன்று மாதங்களுக்குள்ளாக மசோத்தாக்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்ற வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை 8-4-2025 அன்று பெற்றுத் தந்தது, (மேசையைத் தட்டும் ஒலி) இது, இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்குமான வெற்றியாக உள்ளது. இது, எஸ். ஆர். பொம்மை வழக்கில் பெறப்பட்டது போன்ற ஒரு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பாகும்.

அண்மைக்காலத்தில் நாட்டில் பெரும் விவாத பொருளாக மாறி இருப்பது வக்ஃப் வாரிய சட்ட திருத்தம். அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் உணர்ந்து நாடாளுமன்றத்திலும், நிலைக் குழுவிலும் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்களின் மூலம் எதிர்ப்பை பதிவு செய்தார் - முதலமைச்சர் அவர்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் சமூகத்தின் உயர் நிலையில் இருக்கும் முக்கிய பிரமுகர்களின் எதிர்ப்பை மீறி நாடாளுமன்றத்தில் அந்தச் சட்டத் திருத்தம் வந்தபோது அதனை எதிர்த்து குரல் கொடுத்து இந்த மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியவர் இன்றைய முதல்வர் ஆவார்கள்.

மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பு என்ற திட்டத்தை கொண்டுவர முயற்சிக்கும் இந்த வேளையில் இதனால் தென் மாநிலங்கள் மட்டுமின்றி மக்கள்தொகையை கட்டுப்படுத்திய அனைத்து மாநிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதை சுட்டிகாட்டியதோடு நிற்காமல், மாநில முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர்கள் மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்களை இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் அழைத்துப் பேசி, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியவர் நம்முடைய - முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**எல்லோருக்கும் எல்லாம் என்பதுதான் இந்த ஆட்சியினுடைய தாரக மந்திரம். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் அனைத்துத் தரப்பினருமே உயர வேண்டும், நலம் பெற வேண்டும், வளம் பெற வேண்டும் என்பதுதான் நம்முடைய - முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம்.**

**புதிய புதிய திட்டங்கள்**

யார், யாருக்கு என்ன வேண்டும் என்பதை - முதலமைச்சர் அவர்கள் சிந்திக்கின்றார், செயல்படுகின்றார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 1 கோடியே 15 இலட்சம் பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நான் முதல்வன் திட்டத்தில் 1 லட்சத்து 34 ஆயிரம் பேர் மகளிர். காலை உணவுத் திட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 18 இலட்சம் பேர் பயனடைந்தார்கள். மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 2 கோடி பேர் பயனாளிகள். மகளிர் விடியல் பயணம் 675 கோடியே 98 இலட்சம் பேர், புதுமை பெண் திட்டத்தில் 4 இலட்சத்து 95 ஆயிரம் பேர், தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 3,80,467 பேர் பயனாளிகள்.

- அமைச்சர்களுக்கு வேண்டியவர், கட்சி நிர்வாகிகளுக்கு வேண்டியவர், அதிகாரிகளுக்கு வேண்டியவர், சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருப்பவர்களுக்கு வேண்டியவர் என்று திட்டத்தின் பலன் திசைமாறிச் சென்றுவிடக் கூடாது என்பதற்காக யாருடைய சிபாரிசுக்கும் இடமில்லாத வகையில் திட்டத்தை வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்தி வருகிறார் - முதலமைச்சர் அவர்கள்.

ஜாதி இல்லை, மதம் இல்லை, எந்த வேறுபாடும் இல்லாமல் வாக்களித்தோர் மட்டுமல்ல, வாக்களிக்காதோர் எல்லோரும் உரிய முறையில் பயன்பெறும் வகையில் இந்த புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் நமது முதலமைச்சர் அவர்கள். அதன் காரணமாக தகுதியுடைய அனைவருக்கும் தேவையான திட்டங்கள் எந்தவிதத் தடங்கலும் இன்றிச் சென்றடைகின்றன. இதுவரை ஊடகங்களோ, பத்திரிகைகளோ கோடிக்கணக்கான பயனாளிகளைத் தேர்வு செய்திருக்கின்ற நம்முடைய முதல்வரைப் பற்றி, சரியான முறையில் தேர்வில்லை என்று சொல்லி, ஒரு துண்டுப் பிரசுரம்கூட எந்த பத்திரிகையிலும் வரவில்லை, ஊடகங்களிலும் வரவில்லை. கோடிக்கணக்கான பயனாளிகளை, சிந்தித்துச் செயல்பட்டு தேர்வு செய்த - முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார, மனமார பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பகைவனுக்கு அருள்வாய் நன் நெஞ்சே**

**என்னிடம் கட்சி வேறுபாடு இன்றி மனம் திறந்து பல சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவார்கள். அவர்கள், - முதலமைச்சர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது இன்று உள்ள காலகட்டத்தில் பல்வேறு மாநில முதலமைச்சர்களை ஒரு சில மணித்துளிகளில் ஓரணியில் திரட்டி, மக்களின் உரிமைகளை மாநிலத்தின் உரிமைகளை நிலைநாட்டி, ஜனநாயகத்தின் வலிமையை பறைசாற்றும் வகையில் உள்ள அரசியல் ஜாம்பவான், எதிர்கால இந்தியாவின் வழிகாட்டி என்று குறிப்பிடும்போது - முதலமைச்சர் அவர்கள் வீற்றிருக்கும் இந்த அவையில் பேரவைத் தலைவராக நானும் இங்கே அமர்ந்திருப்பதை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

**இந்த நேரத்தில் மகாகவி பாரதியார் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.**

**'பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே**
**பகைவனுக் கருள்வாய் !'**

என்ற அந்த மகாகவி பாரதியாரின் பாடலுக்கு ஏற்ப வாழ்ந்து வருகின்றார், ஆட்சி செய்து வருகின்றார் நமது - முதலமைச்சர் அவர்கள் என்று கூறி, பகைவனுக்கும் அருள்கிறார் என்றால் மக்களுக்கு அவர் எந்த அளவுக்கு பாடுபடுவார் என்பதை என் போன்றோராலும், எல்லோராலும் உணர முடிகிறது. அதே பாடலில் மற்றொரு இடத்தில் பாரதியார் குறிப்பிடுகிறார்.

**"தின்ன வரும்புலி தன்னையும் அன்போடு**
**சிந்தையிற் போற்றிடுவாய் நன் நெஞ்சே"**

ஆம். தம்மை எதிர்ப்போர்க்கும், தம்மை அரசியல் ரீதியாக அழிக்க நினைப்போர்க்கும் நல்லது ஒன்றையே திருப்பிச் செய்து வரும் நம் முதல மைச்சரை இந்த மன்றத்தில் வெளிப்படையாகப் பாராட்டுவதில் எனக்கு எந்த தயக்கமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

- முதலமைச்சர் அவர்கள், தங்களின் பதிலுரையில் 2026-ல், என்ன நடக்கும் என்று கூறி இருக்கின்றாரோ அதையே நான் வழிமொழிந்து, மேற்படி பணிகளுக்கு துணையாக இருந்து பணியாற்றி வரும் - துணை முதலமைச்சர் அவர்களையும் மனதார, நெஞ்சார பாராட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**அனைத்து மாநிலங்களுக்கும் முன்னுதாரணம்!**

தினந்தோறும் திட்டங்கள் தீட்டும் நாளாக, விடியும் நாளாக, விடியல் தரும் நாளாக உருவாக்கி வரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழி தொடர்ந்து, இந்திய நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் முன்னுதாரணமாகத் திகழும் வகையில் 'திராவிட மாடல்' ஆட்சியினை சிறப்பாக நடத்தி வரும் - முதலமைச்சர் அவர்களுக்கும், உறுதுணையாக இருக்கும் - துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையில் விவாதிக்கப்படும் பொருட்களிலிருந்து விலகிச் சென்று அல்லது அவை மரபுக்கு அப்பாற்பட்டு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கையில், தனக்கே உரித்தான பாணியில் அவையின் விதிமுறைகள் மற்றும் மரபுகளைச் சுட்டிக்காட்டி தனது கருத்துகளை உறுதிபடத் தெரிவித்து, இப்பேரவையை செம்மையாக வழிநடத்துவதிலே எனக்கு பேருதவியாக இருந்துவரும் நமது - பேரவை முன்னவர் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை நெஞ்சார, மனதார நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த வயதிலும் இளமைத் துடிப்போடு உங்களுடைய கருத்துகள் எல்லோரையும் பாராட்டக்கூடியது. 100 ஆண்டுகள் காலம் வாழ்வீர்கள் என்று சொன்ன அடுத்த நிமிடமே எனக்கு அதில் சந்தேகமே இல்லை என்று சொல்கின்ற அளவுக்கு திடமான நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த அவையை நடத்துவதற்கு பேருதவி செய்த உங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறவும், உறுப்பினர்கள் விவாதங்களிலே சிறப்பாகப் பங்கேற்கவும் உதவி புரிந்த - அமைச்சர் பெருமக்கள், - பேரவைத் துணைத் தலைவர், - மாற்றுத் தலைவர்கள், - அரசு தலைமைக் கொறடா, - எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் - எதிர்க்கட்சித் துணைத் தலைவர், - எதிர்க்கட்சிக் கொறடா, சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் - உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது கனிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவைக் கூட்டம் இனிதே நடைபெற அனைத்து உதவிகளையும் செய்த தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அவர்களுக்கும், - முதலமைச்சர் அவர்களின் செயலாளர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கூட்டத் தொடர் சிறப்பாக நடைபெற அனைத்து வகைகளிலும் உதவி புரிந்த, அனைத்துத் துறைச் செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் உரையாற்றினார்.